அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 16/2014

எனது இலக்கம்: EST-7/TPORT/05/1014
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு - 07

2014.06.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் மாகாணசபை உத்தியோகத்தர்களுக்கும் நீதித்துறை உத்தியோகத்தர்களுக்குமான உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள்**

மக்கள் சேவைகளை வினைத்திறனுடனும் ஊக்கத்துடனும் தாமதமின்றியும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் சிரேட்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக இதுவரை வெளியிட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகள் மூலம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு பாதிப்பேற்படாதவாறு 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**02. உத்தியோகபூர்வ வாகனங்கள் குறித்தொதுக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.**

இங்கு கீழ் 2:1 ஆம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கடமை நோக்கங்களுக்காகவும் அதற்காக அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கும் இடையில் போவதற்கும் வருவதற்குமாக உத்தியோகபூர்வ வாகனமொன்றை உபயோகப்படுத்தலாம். வதிவிடத்திற்கும் அலுவலகத்திற்கும் இடையிலான ஆகக்கூடிய தூரம் 50 கிலோ மீற்றர்களை விஞ்சுதலாகாது. அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த கட்டண செலுத்துகை அடிப்படையில் தனிப்பட்ட பிரயாணங்களுக்காக வாகனத்தினை உபயோகிப்பதற்கு இங்கு கீழ் குறிப்படப்படும் நிரலில் "உரிமை உள்ளது" என குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 50 கிலோ மீற்றர்கள் என்னும் தூர எல்லை ஏற்புடையதாகாது.

| | உத்தியோபூர்வ வாகனங்கள் குறித்தொதுக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் | குறித்தொதுக்கப்படும் வாகனம் தனிப்பட்ட பாவனைக்கு உபயோகப்படுத் துவதற்கான உரிமை கிடைக்கப் பெறும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|
| | **அரசாங்க சேவையின் பதவிகள்** | |
| I. | சனாதிபதியின் செயலாளர் | உரிமை உள்ளது |
| II. | பிரதம அமைச்சரின் செயலாளர் | உரிமை உள்ளது |
| III. | அமைச்சரவைச் செயலாளர் | உரிமை உள்ளது |
| IV. | அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்களின் செயலாளர்கள் | உரிமை உள்ளது |
| V. | திறைசேரியின் பிரதிச் செயலாளர் | உரிமை உள்ளது |
| VI. | தேர்தல்கள் ஆணையாளர் | உரிமை உள்ளது |
| VII. | கணக்காய்வாளர் அதிபதி | உரிமை உள்ளது |
| VIII. | செயலாளர் - அரசாங்க சேவைகள் ஆணைக்குழு<br>நீதிச் சேவைகள் ஆணைக்குழு<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு | உரிமை உள்ளது |
| IX. | மேலதிகச் செயலாளர்கள் -<br>(அ) சனாதிபதியின் செயலகம்<br>(ஆ) பிரதம அமைச்சரின் அலுவலகம்<br>(இ) அமைச்சரவை அலுவலகம்<br>(ஈ) அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்கள்<br>(உ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | உரிமை உள்ளது |
| X. | அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் | உரிமை உள்ளது |
| XI. | அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றின் கீழ் உள்ளதும் அதன் கீழ் இல்லாததுமான திணைக்களங்களின் தலைவர்கள், அத்துடன்<br>(அ) பணிப்பாளர் அதிபதி / மேலதிகப் பணிப்பாளர் அதிபதி / பிரதிப் பணிப்பாளர் அதிபதி<br>(ஆ) ஆணையாளர் அதிபதி / மேலதிக ஆணையாளர் அதிபதி / பிரதி ஆணையாளர் அதிபதி<br>(இ) புகையிரத பொது முகாமையாளர்<br>(ஈ) பிரதி பிரதான மதிப்பீட்டாளர்<br>(உ) சிரேட்ட பிரதி அளவையாளர் அதிபதி / பிரதி அளவையாளர் அதிபதி / மாகாண அளவையாளர் அதிபதி<br>(ஊ) சிரேட்ட பிரதி அரசாங்க அச்சாளர் | உரிமை உள்ளது |
| XII. | SL-1-2006 இல் வகுப்பு I இற்கு உரிய அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் அளவுத்திட்டமொன்றில் உள்ள சிரேட்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர், கட்டுப்பாட்டாளர், ஆணையாளர் போன்ற பதவிகளை வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் | உரிமை உள்ளது |
| XIII. | மேலதிக மாவட்டச் செயலாளர் | உரிமை உள்ளது |

| | | |
|---|---|---|
| XIV. | பிரதேச செயலாளர் | உரிமை உள்ளது |
| XV. | செயலாளர் - கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு | உரிமை உள்ளது |
| XVI. | தொழில் திணைக்களத்தின் சிரேட்ட சட்ட ஆலோசகர் | உரிமை உள்ளது |
| XVII. | 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய சம்பள அளவுத்திட்டம் SL 1-2006 வரையறுக்கப்பட்டுள்ள உரிய நாடளாவிய சேவை அல்லது திணைக்களச் சேவை ஒன்றின் வகுப்பு 1 இன், வகுப்பு 1 இல் நிரந்தரப் பதவி ஒன்றாகப் பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டுள்ள நாடளாவிய சேவை ஒன்றின் அல்லது திணைக்களச் சேவை ஒன்றின் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவர் | உரிமை உள்ளது |
| XVIII. | சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள பிற விசேட பதவிகளை வகிக்கின்ற SL-1-2006 சம்பள அளவுத்திட்டத்தில் வகுப்பு I இற்கு உரிய ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தை அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டமொன்றை / நிலையான சம்பளமொன்றைப் பெறும் உத்தியோகத்தர்கள் | உரிமை இல்லை |
| | **நீதித்துறை உத்தியோகத்தர்கள்** | |
| I. | பிரதம நீதியரசர் | உரிமை உள்ளது |
| II. | உயர் நீதிமன்ற நீதியரசர்கள் | உரிமை உள்ளது |
| III. | மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் | உரிமை உள்ளது |
| IV. | மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | உரிமை உள்ளது |
| V. | மேல் நீதிமன்ற நீதிபதிகள் | உரிமை உள்ளது |
| VI. | மாவட்ட நீதிபதிகள் | உரிமை உள்ளது |
| VII. | நீதவான்கள் | உரிமை உள்ளது |
| VIII. | தொழில் நியாயசபைத் தலைவர்கள் | உரிமை உள்ளது |
| IX. | ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள் | உரிமை உள்ளது |
| X. | தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் | உரிமை உள்ளது |
| XI. | மேலதிக தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் | உரிமை உள்ளது |
| XII. | பிரதி தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் | உரிமை உள்ளது |
| | **சட்ட உத்தியோகத்தர்கள்** | |
| I. | சட்டமா அதிபர் | உரிமை உள்ளது |
| II. | மன்றாடியார் அதிபதி | உரிமை உள்ளது |
| III. | மேலதிக மன்றாடியார் அதிபதி | உரிமை உள்ளது |
| IV. | பிரதி மன்றாடியார் அதிபதி | உரிமை உள்ளது |
| V. | சிரேட்ட அரச சட்டத்தரணி / சிரேட்ட அரச சட்டவாதி | உரிமை உள்ளது |
| VI. | அரச சட்டத்தரணி / அரச சட்டவாதி | உரிமை உள்ளது |
| VII. | சட்டவரைநர் | உரிமை உள்ளது |
| VIII. | மேலதிக சட்டவரைநர் | உரிமை உள்ளது |
| IX. | பிரதி சட்டவரைநர் | உரிமை உள்ளது |
| X. | சிரேட்ட உதவி சட்டவரைநர் | உரிமை உள்ளது |

| | | |
|---|---|---|
| XI. | உதவி சட்டவரைநர் | உரிமை உள்ளது |
| XII. | பணிப்பாளர் அதிபதி, பிரதி பணிப்பாளர் அதிபதி, உதவிப் பணிப்பாளர் அதிபதி - இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | உரிமை உள்ளது |
| | **முப்படை உத்தியோகத்தர்கள்** | |
| I. | இலங்கை தரைப்படையின் நிரந்தர பிறிகேடியர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களும் அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும் | உரிமை உள்ளது |
| II. | இலங்கை கடற்படையின் நிரந்தர கொமாண்டர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களும் அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும் | உரிமை உள்ளது |
| III. | இலங்கை விமானப்படையின் நிரந்தர விங்கொமாண்டர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களும் அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும் | உரிமை உள்ளது |
| | **பொலிஸ் உத்தியோகத்தர்கள்** | |
| I. | பொலிஸ்மா அதிபர் | உரிமை உள்ளது |
| II. | சிரேட்ட பொலிஸ்மா அதிபர் | உரிமை உள்ளது |
| III. | பிரதி பொலிஸ்மா அதிபர் | உரிமை உள்ளது |
| IV. | சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் | உரிமை இல்லை |
| V. | பொலிஸ் அத்தியட்சகர் | உரிமை இல்லை |
| VI. | உதவி பொலிஸ் அத்தியட்சகர் | உரிமை இல்லை |
| | **அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள்** | |
| I. | பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதிபதி | உரிமை உள்ளது |
| II. | பணிப்பாளர், இலங்கை தேசிய வைத்தியசாலை | உரிமை உள்ளது |
| III. | பணிப்பாளர், விசேட பொது சுகாதார நிறுவனம் | உரிமை உள்ளது |
| IV. | பணிப்பாளர், போதனா வைத்தியசாலைகள் | உரிமை உள்ளது |
| V. | பணிப்பாளர், மாகாண பொது வைத்தியசாலைகள் | உரிமை உள்ளது |
| VI. | பணிப்பாளர், விசேட மூன்றாம் நிலை வைத்தியசாலைகளும் நிறுவனங்களும் | உரிமை உள்ளது |
| VII. | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் | உரிமை உள்ளது |
| VIII. | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் | உரிமை உள்ளது |
| IX. | பணிப்பாளர், சுகாதார அமைச்சு (SL-2-2006 சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் வகுப்பிற்குரிய 37,495/- ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள நிலையினைக் கொண்ட சுகாதார அமைச்சில் பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் ) | உரிமை உள்ளது |
| X. | நிபுணத்துவ சட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | உரிமை உள்ளது |
| | **மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்கள்** | |
| I. | மாகாண பிரதான செயலாளர் | உரிமை உள்ளது |
| II. | மாகாண ஆளுநரின் செயலாளர் | உரிமை உள்ளது |
| III. | மாகாண அமைச்சுச் செயலாளர் | உரிமை உள்ளது |

| | | |
|---|---|---|
| IV. | மாகாணசபை சபைச் செயலாளர் | உரிமை உள்ளது |
| V. | மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் | உரிமை உள்ளது |
| VI. | மாகாண பிரதான செயலகத்தின் பிரதி பிரதான செயலாளர் | உரிமை உள்ளது |
| VII. | மாகாண சபையொன்றின் பிரதான அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவியை வகிக்கின்ற இலங்கை நிருவாகச் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | உரிமை உள்ளது |
| VIII. | மாகாண அமைச்சின் கீழுள்ள மாகாணத் திணைக்களங்களில் SL-1-2006 இல் வகுப்பு I இற்கு உரிய சம்பள அளவுத்திட்டத்தினைக் கொண்ட பதவியொன்றை வகிக்கின்ற திணைக்களத் தலைவர்கள் | உரிமை உள்ளது |
| IX. | 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய சம்பள அளவுத்திட்டம் SL 1-2006 வரையறுக்கப்பட்டுள்ள உரிய நாடளாவிய சேவை அல்லது திணைக்களச் சேவை ஒன்றின் வகுப்பு 1 இன், வகுப்பு 1 இல் நிரந்தரப் பதவி ஒன்றாகப் பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டுள்ள நாடளாவிய சேவை ஒன்றின் அல்லது திணைக்களச் சேவை ஒன்றின் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவர் | உரிமை உள்ளது |
| X | மாநகர சபைகளின் மாநகர ஆணையாளர் | உரிமை உள்ளது |
| | **அமைச்சர்களின் (அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற) பிரதி அமைச்சர்களின் பிரத்தியேக பதவியினர்களும் பிற பதவியினர்களும்** | |
| I. | அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சரொருவரின் பிரத்தியேக செயலாளர் | உரிமை உள்ளது |
| II. | பிரதி அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளர் | உரிமை இல்லை |
| III. | ஒருங்கிணைப்புச் செயலாளர் | உரிமை இல்லை |
| IV. | மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் | உரிமை இல்லை |
| V. | அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றின் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | உரிமை இல்லை |

**2:2** மேல் 2.1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒதுக்கப்படும் வாகனங்கள் தனிப்பட்ட பாவனையின் பொருட்டு பயன்படுத்துவற்கு உரித்துள்ள SL-3-2006 சம்பள அளவுத் திட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டமொன்று ஏற்புடைத்தான உத்தியோகத்தர்கள் 1,500/- ரூபாவையும் மற்றைய உத்தியோகத்தர்கள் 1,000/- ரூபாவையும் மாதாந்தம் அரசாங்கத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

## 03. மேல் 2:1 ஆம் அட்டவணையின் மூலம் தழுவப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்.

**3.1** மேல் 2:1 அட்டவணையின் மூலம் தழுவப்படாத இருந்தபோதிலும் கடமை நோக்கங்களுக்காக 50 கிலோ மீற்றர் (போவதற்கும் வருவதற்கும் 100 கிலோ மீற்றர்) இடைத்தூர எல்லைக்குள் அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கும் போவதற்கும் வருவதற்கும் மாத்திரம் உத்தியோகபூர்வ வாகனமொன்றை பயன்படுத்துவற்கு சகல விதத்திலும் தகைமை உடைய உத்தியோகத்தர்கள் இருப்பார்களாயின் அவர்கள் தொடர்பில் திணைக்களத் தலைவரினால் / நிறுவனத் தலைவரினால் தனிப்பட்ட ரீதியில் வழங்கப்படும் சிபாரிசுகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் பெயர்குறித்த நியமிப்புக்களை இந்த சுற்றறிக்கையின் இணைப்பு - 01 படிவத்திற்கமைய தயாரித்து இயைபுள்ள அமைச்சுச் செயலாளர்கள் அவர்களுடைய சிபாரிசுடன் பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**3.2** மேல் 3:1 இன் கீழ் வழங்கப்படும் சகல பெயர்குறித்த நியமிப்புகளும் இங்கு கீழ் 3:4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அடங்கிய பெயர்குறித்த நியமிப்புக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, இந்தக் குழுவினால் இக்கோரிக்கை ஆராயப்பட்டதன் பின்னர், இந்தக் குழுவின் தீர்மானம் இயைபுள்ள செயலாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

**3.3** மேல் 2:1 அட்டவணையில் உத்தியோகபூர்வ வாகனம் தனிப்பட்ட பாவனைக்கான உரித்து வழங்கப்படாத உத்தியோகத்தர் ஒருவர் இருப்பாராயின் அவர் தொடர்பிலான பெயர்குறித்த நியமிப்பு இணைப்பு - 01 படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு திணைக்களத் தலைவரினால் / நிறுவனத் தலைவரினால் இயைபுள்ள அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட சிபாரிசுடன் பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**3.4** மேல் 3:3 இன் கீழ் கிடைக்கப் பெறும் பெயர்குறித்த நியமிப்புகள் பின்வரும் உத்தியோகத்தர்கள் அடங்கிய பெயர்குறித்த நியமிப்பு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்கோரிக்கைகள் இந்த குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, இந்த சுற்றறிக்கைக்கு உள்வாங்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்யப்படும் பெயர்குறித்த நியமிப்புகள் இருப்பின் அது தொடர்பிலான குழுவின் தீர்மானம் பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் இத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் மேல் 2:1 ஆம் அட்டவணையின் 2 ஆம் நிரலின் கீழ் ஏற்புடைத்தானவாறு உத்தியோகபூர்வ வாகனமொன்றை தனிப்பட்ட பிரயாணங்களுக்காக உபயோகப்படுத்துவதற்கு உரித்துள்ள ஒருவராக கருதப்படுவார் .

- செயலாளர், பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு - (தலைவர்)
- செயலாளர், தொழினுட்ப, ஆராய்ச்சி அமைச்சு - (உறுப்பினர்)
- திறைசேரியின் பிரதிச் செயலாளர் - (உறுப்பினர்)
- அரசாங்க நிதிப் பணிப்பாளர் அதிபதி - (உறுப்பினர்)
- பணிப்பாளர் அதிபதி, வர்த்தக, முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் - (உறுப்பினர்) ; அத்துடன்
- தாபனப் பணிப்பாளர் அதிபதி - (உறுப்பினர் / கூட்ட அழைப்பாளர்)

**04. பிரதி உத்தியோகத்தர்கள் மட்டத்தில் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் அளித்தல்** :

நிறுவனத்துக்கு சொந்தமாகவுள்ள வாகனங்களின் எண்ணிக்கையையும் வாகனங்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த எரிபொருள் நிதி ஏற்பாட்டினையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு சேவையின் தேவையின் நிமித்தம் அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கும் இடையில் போவதற்கும் வருவதற்குமாக குழு போக்குவரத்து வசதிகள் நிறுவனத் தலைவரின் தற்றுணிபின் பேரில் பின்வருவோர்களுக்கு வழங்கப்படலாம். இதன் போது பிரயாண இடங்களுக்கிடையிலான ஆகக்கூடிய இடைத்தூரம் 50 கிலோ மீற்றரை (போவதற்கும் வருவதற்கும் 100 கிலோ மீற்றர்) விஞ்சாதிருக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய வாகனமொன்று இரவு நேரத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய இடமானது நிறுவனத் தலைவரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4:1 அமைச்சரவை அந்தஸ்துள்ள அல்லது அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றில் / திணைக்களமொன்றில் பிரதிப் பணிப்பாளர், பிரதி ஆணையாளர், பிரதி கட்டுப்பாட்டாளர் அத்துடன் இதற்குச் சமமான பதவிகளை வகிக்கின்ற ஏதேனும் அகில இலங்கை சேவையொன்றின் I அல்லது II ஆம் வகுப்பிற்குரிய அல்லது இதற்குச் சமமான பிற சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்.

4:2 மாகாண பிரதான செயலாளரின் அலுவலகத்தில், மாகாண அமைச்சுகளில் அத்துடன் அவற்றின் கீழுள்ள திணைக்களங்களில் பிரதி உத்தியோகத்தர் மட்ட பதவிகளை வகிக்கின்ற அகில இலங்கை சேவையொன்றின் I அல்லது II ஆம் வகுப்பிற்குரிய அல்லது இதற்குச் சமமான பிற சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்.

## 05 பொது ஏற்பாடுகள்

5:1 தனிப்பட்ட பயணங்களுக்காகவும் உத்தியோகபூர்வ வாகனமொன்றை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு இயைபுள்ள வாகன வகுப்பைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று இருப்பின் அத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் தனிப்பட்ட பயணங்களுக்காக வாகனத்தைச் செலுத்து வதற்கு கோரிக்கை விடுப்பாராயின் அதற்கான அங்கீகாரம் திணைக்களத் தலைவரினால் வழங்கப்படலாம் என்பதோடு, உத்தியோகத்தரின் விருப்பத்திற் கமைய உத்தியோகபூர்வ பயணங்களுக்காகவும் இந்த அனுமதியை நீடிக்கலாம்.

5:2 தனிப்பட்ட பயணங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் இயைபுள்ள அமைச்சுக்களினால் / திணைக்களங்களினால் / நிறுவனங்களினால் செலுத்தப்படும் அகல்விரிவான காப்புறுதிச் சான்றிதழ் ஒன்றின் மூலம் தழுவப்பட்டிருத்தல் வேண்டும்.

5:3 தனிப்பட்ட பயணங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனமொன்று குறித் தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த வாகனத்தை தமது இல்லத்தில் வைத்திருப்பதற்கு முடியும்.

5:4 உத்தியோகபூர்வ வாகனத்திற்காக வழங்கப்படும் எரிபொருளின் அளவு எல்லைகள் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவானதாதல் வேண்டும்.

## 06. இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள்:

6:1 இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளை கொண்டுள்ள அத்துடன் இந்த சுற்றறிக்கையின் 07 ஆம் உபபிரிவின் கீழ் இதற்காக தகைமையற்றவராகக் கருதப்படாத நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான பதவியொன்றை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆயுட் காலத்தில் ஒரேயொருமுறை மாத்திரம் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

6:2 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள SL-1-2006 சம்பள அளவுத் திட்டத்தின் தரம் I இல் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டமொன்றுடனான பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருத்தல் அத்துடன் மேல் 2:1 ஆம் அட்டவணையின் 2

ஆம் நிரலில் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை தனிப்பட்ட பாவனைக்கும் உபயோகிக்கும் உரித்துடைய பதவியொன்றில் அல்லது பதவிகளில் ஆகக் குறைந்தது 03 வருட காலம் நிரந்தர அடிப்படையில் தொடர்ச்சியாக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

**6:3** ஆயினும், உத்தியோகத்தரானவர் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் வகித்த பதவியின் நியமனம் பதில் அடிப்படையின் மீதோ அல்லது கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையின் மீதோ அமைந்திருந்தாலும் உத்தியோகத்தர் அதற்கு கிட்டிய இந்த சலுகையுடைய மேல் 2:1 ஆம் அட்டவணையின் 2 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை தனிப்பட்ட பாவனைக்கு உபயோகிக்கும் உரித்துடைய உபநிலை பதவியொன்றில் சேவையாற்றியிருப்பதுடன் ஏனைய தகைமைகளையும் பூர்த்திசெய்திருந்தால் உத்தியோகத்தரின் முன்னைய பதவிக்கான சேவைக்காலத்தையும் பதில் / கடமைகளை நிறைவேற்றும் பதவிக்கான சேவைக்காலத்தையும் சேர்த்து இந்த முழு சேவைக்காலத்தையும் கருத்திற்கொண்டு உத்தியோகத்தர் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் இந்த சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் சலுகைக்கு உரித்துடையராவார்.

**6:4** உத்தியோகத்தர் ஒருவர் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் இந்த தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டுக்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியுமாவது தமது உரிமைக்கு ஏற்புடைத்தானவாறு விருப்பத் தெரிவு இளைப்பாறும் வயதினை அடைந்ததன் பின்னர் இளைப்பாறும் போது அல்லது கட்டாயமாக ஓய்வுபெறுவதற்கு உரியதாக தமது ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயேயாகும்.

**6:5** ஆயினும், அரசாங்கத்தின் தீர்மானமொன்றின் மீது ஏதேனும் திணைக்களமொன்றை மீளமைத்தல் / மூடுதல் அல்லது பதவியொன்றை இல்லாதொழித்தல் போன்ற கட்டுப்படுத்த முடியாத காரணங்களின் மீது விருப்பத் தெரிவு இளைப்பாறும் வயதினை அடைவதற்கு முன்னர் கட்டாயமாக ஓய்வுபெற நேரிட்டால், மேல் 6:1 மற்றும் 6:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் பின்வரும் விடயங்களையும் பூர்த்தி செய்திருந்தால் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு விண்ணப்பிக்கலாம்.

**6:5:1** அரசாங்கத்தில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் மாற்றுத் தொழில் ஒன்றுக்கு அரசாங்கத்தினால் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்காமை.

**6:5:2** வழங்கப்பட்ட அத்தகைய தொழில் ஒன்றை உத்தியோகத்தர் நிராகரித்திருக்காமை.

**6:6** சுகாதார அமைச்சின் செயலாளரின் 2008-05-06 ஆம் திகதியிடப்பட்டதும் MA/MS/F/13/2008 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் போக்குவரத்துக்கு மற்றும் வருகை படியொன்றுக்கு உரித்துடைய அரசாங்கத்தின் நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் / அரசாங்கத்தின் நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் அல்லது I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் / I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருந்தால் கட்டாயமாக ஓய்வு பெறும் வயதினை அடைந்ததன் பின்னர், இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**6:6:1** அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக / அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக 25 வருட செயற்பாட்டு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் செயற்பாட்டு சேவைக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக / அரசாங்கத்தின் நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக 03 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

**6:6:2** மேல் 6:6:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள 25 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தில் I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக / I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**6:7** அகில இலங்கை சேவையொன்றில் அல்லது அதற்குச் சமமான பிற திணைக்களப் பதவியொன்றில் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருந்தால் கட்டாயமாக இளைப்பாறும் வயதினை அடைந்ததன் பின்னர் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**6:7:1** SL-1-2006 சம்பள அளவுத் திட்டமும் இதற்கு முன்னர் இதற்குச் சமமான சம்பள அளவுத் திட்டமொன்றும் விதிக்கப்பட்டிருந்த அகில இலங்கை சேவையொன்றில் 25 வருட செயற்பாட்டுச் சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்திருத்தலும் இந்த சேவைக்காலத்தில் 10 வருடங்கள் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றியிருத்தலும்.

**6:7:2** SL-1-2006 சம்பள அளவுத் திட்டமும் இதற்கு முன்னர் இதற்குச் சமமான சம்பள அளவுத் திட்டமொன்றும் விதிக்கப்பட்டிருந்த சேவையொன்றில் அல்லது திணைக்களப் பதவியொன்றில் 25 வருட செயற்பாட்டுச் சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்திருத்தலும் இந்த சேவைக்காலத்தில் 10 வருடங்கள் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றியிருத்தலும்.

**குறிப்பு** :

**"செயற்பாட்டு சேவைக்காலம்"** என்னும் போது தமது பதவிக்குரிய சம்பளங்களைச் சம்பாதித்து உண்மையாகவே கடமையில் ஈடுபட்ட சேவைக்காலமாகும். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மகப்பேறு லீவு தவிர ஏனைய சகல சம்பளமற்ற லீவுகளும் செயற்பாட்டு சேவைக் காலத்திற்குள் கணக்கிடப்படமாட்டாது.

**6:8** மேல் 6:1 முதல் 6:7 வரையுள்ள விடயங்களின் கீழ் "இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர்" இளைப்பாறுவதற்கு முன்னர் மரணித்தால் அவ்வாறு மரணித்த சந்தர்ப்பத்தில் அவர் இந்த உரித்தைப் பெற்றிருப்பின், அந்த உத்தியோகத்தரின் உரித்து அவருடைய வாழ்க்கைத் துணைக்கு வழங்கப்படலாம்.

6:9 விசேட ஏற்பாடுகள்:

6:9:1 அமைச்சுச் செயலாளர் / திணைக்களத் தலைவர் போன்ற பதவிகளுக்கு விசேட சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவைக்குப் புறம்பாக நியமிக்கபடும் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய பதவிகளிலிருந்து விலகும் போது 3 வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியொன்றில் அமைச்சுச் செயலாளர் / திணைக்களத் தலைவர் போன்ற பதவிகளை வகித்திருந்தால் அத்துடன் கிட்டிய 5 வருடங்களினுள் ஏதேனும் சலுகைத் திட்டத்தின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்யாதிருந்தால் இத்தகைய உத்தியோகத்தர்களுக்கும் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்று வழங்கப்படலாம்.

6:9:2 இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றுக்கு உரித்துப் பெற்று இருந்த போதிலும் அதன் கீழ் அனுமதிச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளாத எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெற்றதன் பின்னர், அரசாங்க சேவையின் அமைச்சுச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவர் போன்ற பதவியொன்றை வகிப்பாராயின் அத்தகைய உத்தியோகத்தர் ஒருவருக்கும் மேல் 6:9:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சலுகை வழங்கப்படலாம்.

**07. இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு தகைமை பெறாத உத்தியோகத்தர்கள்** :

7:1 ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 12 (1) ஆம் பிரிவின் கீழ் இளைப்பாற செய்வித்த உத்தியோகத்தர் ஒருவர்.

7:2 பொது நிருவாக / வெளிவிவகார / திறைசேரி சுற்றறிக்கைகளின் கீழ் தீர்வை சலுகையின் மீது வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு நாணயப் பத்திரம் திறக்கப்பட்ட திகதியன்றிலிருந்து அல்லது உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு அதன் முதலாவது கொடுப்பனவு திகதியன்றிலிருந்து இளைப்பாறும் திகதியன்றுக்கு 5 வருடங்களை கடக்காத உத்தியோகத்தர் ஒருவர்.

7:3 ஏதேனும் சலுகை அடிப்படையிலான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் விருப்பத் தெரிவு இளைப்பாறும் வயதினை அடைவதற்கு முன்னர் தமது விருப்பத்தின் பேரில் இளைப்பாறும் உத்தியோகத்தர் ஒருவர்.

**08. மேல் 06 ஆம் பந்தியின் கீழ் தகைமை பெறும் உத்தியோகத்தர்களுக்கு பின்வருமாறு தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்று வழங்கப்படலாம்.**

8:1 வாகனமொன்று இறக்குமதி செய்யப்படும் போது வி.கா.கே. பெறுமதி உத்தியோகத்தர் வகிக்கும் பதவிக்கு அமைவாக இங்கு இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளவாறு 03 வகுதிகளாக வகுப்பீடு செய்யப்படுவதோடு, சிலிண்டர் அளவு பற்றிய உச்ச வரம்பு ஏற்புடையதாகாது.

8:2 மேல் 8:1 இல் ஒவ்வொரு வகுதிக்கும் பின்வரும் கட்டளை நியமங்களின் கீழ் சலுகை மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்று வழங்கப்படலாம்.

| உத்தியோகத்தர் உரித்தாகும் வகுதி | வி.கா.கே பெறுமதி (ஐ.அ.டொலர்) | மோட்டார் வாகனத்தின் எரிபொருள் வகை |
|---|---|---|
| I | 30,000 | பெற்றோல் அல்லது டீசல் |
| II | 27,500 | பெற்றோல் அல்லது டீசல் |
| III | 25,000 | பெற்றோல் அல்லது டீசல் |

**8:3** இறக்குமதி / கொள்வனவு செய்யப்படும் மோட்டார் வாகனத்திற்கு அதன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), துறைமுகங்கள், விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி (PAL), தேசத்தைக் கட்டயெழுப்பும் வரி (NBT) அடங்கலாக செலுத்தப்பட வேண்டிய மொத்த வரியை வி.கா.கே பெறுமதியின் (சுங்க பெறுமதி) 45 சதவீதமாக சீராக்கப்படுதல் வேண்டும்.

**8:4** இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வி.கா.கே பெறுமதி சலுகை வரியுடன் 5,000 ஐ.அ.டொலர்கள் வரை மட்டும் விஞ்சிச் செல்லலாம் என்பதோடு, அவ்வாறு விஞ்சும் 5,000 ஐ.அ.டொலர் வரிச் சலுகை பெறுமதிக்கு மேலதிகமாக இறக்குமதித் தீர்வையும் உத்தியோகத்தரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

**8:5** வாகன இறக்குமதி அனுமதிச்சீட்டொன்றின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு சமமாக கணக்கிடுதலானது உத்தியோகத்தரினால் நாணயப்பத்திரம் திறக்கப்பட்ட திகதியன்றுக்கு உரியதாகவிருந்த ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதியின் மீது செய்யப்படுதல் வேண்டும்.

**09.** மேல் 6 ஆம் பிரிவின் கீழ் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதி அனுமதிச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்பும் உத்தியோகத்தர் ஒருவர் பின்னிணைப்பு - 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்ப பத்திரமொன்றைத் தயாரித்து, இயைபுள்ள திணைக்களத் தலைவரினதும் அமைச்சுச் செயலாளரினதும் சிபாரிசுகளுடன் பொதுத் திறைசேரியின் வர்த்தக, முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**10.** இந்த விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 1984-08-15 ஆம் திகதியிடப்பட்டதும் 264 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும், 1988-02-11 ஆம் திகதியிடப்பட்டதும் 6/88 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும், 1994-02-07 ஆம் திகதியிடப்பட்டதும் 8/94 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் 1993-10-01 ஆம் திகதியிடப்பட்டதும் 24/94 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளையும் 1999-10-08 ஆம் திகதியிடப்பட்டதும் 22/99 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் எவ்வித மாற்றமின்றியும் 1999-10-08 ஆம் திகதியிடப்பட்டதும் 22/99 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் அதன் பின்னர் அதற்காகச் செய்யப்பட்ட திருத்தங்களாக வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் 03/2012 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

11. அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும் நியதிச்சட்ட சபைகளினதும் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வது அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

12. இந்த சுற்றறிக்கை பொதுத்திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ பி.பீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

## 16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3:1 ஆம் 3:3 ஆம் உபபந்திகளின் கீழான பெயர்குறித்த நியமிப்புகள்

01. அமைச்சு / திணைக்களம் : - ..................................................................................................................

02. பிரேரிக்கப்படும் உத்தியோகத்தரின் பெயர் :- ....................................................................................

03. (அ) பதவி :- ............................ (ஆ) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :- ....................................

04. (அ) பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் :- ..........................................................................................
(ஆ) பதவிக்கான சம்பள குறியீட்டு இலக்கம் :- ......................................................................................

05. (I) அலுவலக முகவரி :- ..................................................................................................................
(II) சொந்த முகவரி :- ........................................................................................................................
(III) அலுவலகத்திலிருந்து வதிவிடத்திற்கான இடைத்தூரம் :- .கி.மீ ..................................................

06. உத்தியோகத்தரின் கிட்டிய சிரேட்ட உத்தியோகத்தரின் பதவிப் பெயர் :- ................................

07. கையளிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான விபரங்கள் :- ................................................
..................................................................................................................................................................

08. உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் உள்ள உத்தயோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக :- .........................................................................................................................

09. உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள விசேட கருத்திட்டங்கள், செலவுத் தலைப்பு தொடர்பிலான விபரங்கள் :- ....................................................................................................

10. உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள வெளிக்கள கடமைகளும் பிரயாணம் செய்யப்படும் இடங்களும் இதற்காக நாளாந்தம் போக்குவரத்து செய்யப்பட வேண்டுமா என்பது பற்றியும் :- ....................................................................................................................

11. இதற்காக பொதுப் போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தாமைக்கான காரணங்கள் :-
..................................................................................................................................................................

12. இயைபுள்ள திணைக்களத்தில் / அமைச்சில் ஏற்கனவே இந்த வசதி வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்களும் பதவிகளும் :-......................................................................

13. ஏற்கனவேயுள்ள நிதி ஏற்பாட்டின் கீழ் இந்த வசதியை வழங்க முடியுமா என்பது பற்றி:- ....................................................................................................................................

14. பிற விசேட விடயங்கள் :- ..............................................................................................................

மேற்போந்த தகவல்கள் பிழையற்றவையென உறுதிப்படுத்துவதோடு, இயைபுள்ள உத்தியோகத்தருக்கு ............................ ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ............................ ஆம் பந்தியின் கீழ் அரசாங்க வாகனமொன்றை உபயோகிப்பதற்கு அனுமதியளிப்பதற்குச் சிபாரிசு செய்கின்றேன்.

செயலாளர்
...................................................... அமைச்சு
(ஒப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும்)

திகதி : - .............................................

வகுதி I: 16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதிச் சீட்டொன்றுக்கு தகைமை பெறும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகைய சனாதிபதியினால் நியமனம் செய்யபடும் இளைப்பாறச் செய்விக்கப்படும் உத்தியேகாத்தர்கள்.

I. பிரதம நீதியரசர்

II. சட்டமா அதிபர்

III. உயர்நீதிமன்ற நீதியரசர்கள்

IV. மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்

V. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்

VI. சனாதிபதியின் செயலாளர்

VII. பிரதம அமைச்சரின் செயலாளர்

VIII. அமைச்சரவைச் செயலாளர்

IX. அமைச்சரவை அந்தஸ்துள்ள/ அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றின் செயலாளர்

X. சனாதிபதி செயலகத்தின் பதவியினர் பிரதானி

XI. மாகாண பிரதான செயலாளர்

XII. கணக்காய்வாளர் அதிபதி

XIII. தேர்தல்கள் ஆணையாளர்

XIV. பாதுகாப்புச் சபைத் தலைவர்

XV. இராணுவத் தளபதி

XVI. கடற்படை தளபதி

XVII. விமானப்படை தளபதி

வகுதி II: 16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதிச் சீட்டொன்றுக்கு தகைமை பெறும் மேல் வகுதி I இல் உள்வாங்கப்படாத திணைக்களத் தலைவர்களும் அதற்குச் சமமான அத்துடன் மேற்பட்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களும்.

I திறைசேரியின் பிரதிச் செயலாளர்

II சனாதிபதி மேலதிகச் செயலாளர்

III பொலிஸ்மா அதிபர்

IV பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் , அமைச்சரவைத் அலுவலகத்தின் மேலதிகச் செயலாளர் செயலகத்தின்,

V அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுகளின் மேலதிகச் செயலாளர்

VI அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலாளர்

VII மன்றாட்டியார் அதிபதி

VIII மேல் நீதிமன்ற நீதிபதிகள்

IX சட்டவரைநர்

X அமைச்சரவை அந்தஸ்துள்ள / அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சொன்றின் அல்லது திணைக்கள மொன்றின் திணைக்களத் தலைவர் / பணிப்பாளர் அதிபதி / ஆணையாளர்

XI அரசியலமைப்பு பேரவையினால் நியமனஞ் செய்யப்படும் ஆணைக்குழுவொன்றின் பணிப்பாளர் அதிபதி/ செயலாளர்

XII அகிலஇலங்கை சேவைகளில் விசேட தரம் அல்லது SL-03-2006 சம்பள அளவுத் திட்டம் உரித்துடைய பதவிகள்

வகுதி III: 16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் தீர்வைச் சலுகையுடனான வாகன இறக்குமதிச் சீட்டொன்றுக்கு தகைமை பெறும் மேல் வகுதி I, IIஇன் கீழ் உள்வாங்கப்படாத ஏனைய சகல உத்தியேகாத்தர்களும். .

**16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் கீழ் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் தீர்வைச் சலுகை வாகனமொன்றை இறக்குமதிச் செய்வதற்கு அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்**

**(ஏற்புடைய பகுதிகளை மாத்திரம் நிரப்பவும்)**

01. (I) முதலெழுத்துகளுடன் பெயர் :- ..............................................................................................
(II) முதலெழுத்துகள் குறிக்கும் பெயர் :- ..............................................................................................

02. (I) பிறந்த திகதி :- வருடம் [ ] மாதம் [ ] திகதி [ ]

(II) தேசிய ஆள்அடையாள அட்டை இல.:- [ ]

03. (I) சொந்த முகவரி :- ..............................................................................................
..............................................................................................
..............................................................................................

(II) தொலைபேசி இலக்கம் :-

இல்லம் :- [ ]

செல்லிடத் தொ.பேசி:- [ ]

04. இளைப்பாறும் திகதி :- வருடம் [ ] மாதம் [ ] நாள் [ ]

05. இளைப்பாறுகை :- (I) விருப்பத் தெரிவு இளைப்பாறல் மீது [ ]
(II) கட்டாய இளைப்பாறல் மீது [ ]
(III) பிற காரணங்கள் மீதாயின் குறிப்பிடவும்
..............................................................................................

06. இளைப்பாறும் திகதியன்றுக்கு பெற்றுக் கொண்டிருந்த
(I) சம்பளத் தொகுதி :- ..................................................
(II) சம்பள அளவுத் திட்டம்:- ரூபா ........................
(III) சம்பள நிலை :- ரூபா ............................

07. வாகன அனுமதிச் சீட்டொன்றைப் பெறுவதற்கு தகைமை பெறுவது இந்த சுற்றறிக்கையின் 6ஆம் பிரிவில் எந்த உபபிரிவின் கீழ் என்பது பற்றி :- ..............................................................................

08. **தாங்கள் இந்த சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் 6:2 ஆம் உபபிரிவின் கீழ் தகைமை பெறுவதாயின்**

(I) SL-1-2006 சம்பள அளவுத்திட்டத்தின் தரம் I அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டம் ஒன்றுடனான பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-

வருடம் [ ] மாதம் [ ] திகதி [ ]

(II) பதவிப் பெயர் :- ..............................................................................................

(III) இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டது :- நிரந்தர அடிப்படையில் [ ]
பதில் கடமையாற்றும் அடிப்படையில் [ ]
கடமை நிறைவேற்றும் அடிப்படையில் [ ]
(உரிய இடத்தில் "√" குறியீட்டை இடவும்)

(IV) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் 6:2 ஆம் 6:3 ஆம் உப பிரிவுகளுக்கு உரியதாக வகித்த பதவிகள் தொடர்பிலான விபரங்கள்

| **பதவிப் பெயர்** | **இருந்து** | | | **வரை** | | | **பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளது நிரந்தர / பதில் / கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில்** | **தகைமை பெறும் முழுச் சேவைக்காலம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருடம்** | **மாதம்** | **திகதி** | **வருடம்** | **மாதம்** | **திகதி** | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| மொத்தம் (வருடம்) | | | | | | | | |

09. **தாங்கள் இந்த சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் 6:6 ஆம் உபபிரிவின் கீழ் தகைமை பெறுவதாயின்,**

**(உரிய இடத்தில் "√" குறியீட்டை இடவும்)**

(I) பதவி:-

அரசாங்க நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ☐
அரசாங்க நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ☐
I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ☐
I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ☐

(II) அரசாங்க மருத்துவ உத்தியோகத்தராக / அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தராக முதல் நியமனத் திகதி :

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(III) இந்த பதவியில் 25 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த திகதி:-
……………………………………………………………

(IV) அரசாங்க நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் / அரசாங்க நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக தாங்கள் தகைமை பெறுவதாயின்,

(அ) அரசாங்க நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக /அரசாங்க நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக நியமனம் பெற்ற திகதி:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(ஆ) அரசாங்க நிபுணத்துவ மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக / அரசாங்க நிபுணத்துவ பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக 03 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த திகதி :-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(V) I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் / I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக தாங்கள் தகைமை பெறுவதாயின்,

(அ) I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக/ I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக நியமனம் பெற்ற திகதி:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(ஆ) I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக/ I ஆம் தரத்தைச் சேர்ந்த அரசாங்க பல் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக 10 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த திகதி :-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

10. **தாங்கள் இந்த சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் 6:7 ஆம் உபபிரிவின் கீழ் தகைமை பெறுவதாயின்**

(அ) மேற்படி 6:7:1 அல்லது 6:7:2 இன் கீழ் வரும் சேவை அல்லது பதவி ஒன்றுக்கான நியமனத் திகதி:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(ஆ) இந்தச் சேவையில் / பதவியில் 25 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(இ) SL-1-2006 இன் சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

(ஈ) சொல்லப்பட்ட I ஆம் தரத்தில் 10 வருட செயற்பாட்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி: -

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| | | |

11. அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறுவதற்கு முன்னர் 05 வருட காலத்திற்குள் அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் அல்லது திறைசேரி சுற்றறிக்கை ஒன்றின் கீழ் அல்லது பிற ஏற்பாடுகளின் கீழ் தீர்வைச் சலுகையின் மீது வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பிலான விபரங்கள்:

(I) இயைபுள்ள சுற்றறிக்கையின் இலக்கம் :- ........................................................................

(II) நாணயப் பத்திரம் திறக்கப்பட்ட திகதி அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்துக்கு முதலாவதாக கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி :- ........................................................................

(III) வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட திகதி :- ........................................................................

(IV) பதிவு செய்யப்பட்ட திகதி :- ........................................................................

(V) வாகனத்தின் பதிவு இலக்கம் :- ........................................................................

12. வாகன அனுமதிச்சீட்டுக்கான கோரிக்கை இணைப்பு 02 இல் எந்த வகுதியின் கீழ் என்பது பற்றி (பின்வரும் அட்டவணையின் 4 ஆம் அட்டவணையில் "√" குறியீட்டை இடவும்)

| **உத்தியோகத்தர் உரித்தாகும் வகுதி** | **வி.கா.கே பெறுமதி (ஐ.அ.டொலர்)** | **மோட்டார் வாகனத்தின் எரிபொருள் வகை** | **விண்ணப்பதாரருக் குரிய வகுதி** |
|---|---|---|---|
| I | 30,000 | பெற்றோல் அல்லது டீசல் | |
| II | 27,500 | பெற்றோல் அல்லது டீசல் | |
| III | 25,000 | பெற்றோல் அல்லது டீசல் | |

அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியதன் காரணமாக நான் மேற்போந்த சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக ஒரேயொருதடவை மாத்திரம் கிடைக்கப் பெறும் தீர்வை சலுகையுடனான வாகன அனுமதிச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புகின்றேன். மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும் பிழையற்றவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்த தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அதுபற்றி அறிவிப்பதற்கும் உடன்படுகின்றேன். மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையற்றவையாயின் கொண்டுவரப்படும் வாகனத்திற்கு உரியதாக வழங்கப்பட்ட சலுகைத் தீர்வை என்னிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் அறிவேன்.

.............................................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: - ..............................................

எனது இல.:-
திகதி:-

செயலாளர்,

. ......................................................................................... அமைச்சு

இந்த அலுவலகத்திலுள்ள உத்தியோகத்தரின் பிரத்தியேக கோவைக்கு அமைவாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துவதோடு, பின்வரும் ஆவணங்களின் பிரதிகளையும் இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

| | **ஏற்புடைத்தாகும் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது** | **ஏற்புடைத்தாகாது** |
|---|---|---|
| 1. ஓய்வுபெறச் செய்விக்கும் கடிதம் | | |
| 2. சேவைக்காலம் 25 வருடங்கள் உள்ளமை பற்றி உறுதிப்படுத்தும் முதல் நியமனக் கடிதம் | | |
| 3. சேவையின் / பதவியின் I ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்டமைக்கான கடிதம் | | |
| 4. நிபுணத்துவ மருத்துவர் ஒருவாக / நிபுணத்துவ பல் மருத்துவராக நியமிக்கப்பட்ட நியமனக் கடிதம் | | |
| 5. திறைசேரியினால் பதவி அங்கீகரிக்கப்பட்டமைக்கான கடிதம் | | |
| 6. மரணித்த உத்தியோகத்தர் ஒருவர் சார்பிலாயின் மரணச்சான்றிதழ், திருமணச்சான்றிதழ் | | |
| 7. மருத்துவ சான்றிதழின் மீது ஓய்வுபெறச் செய்விக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவராயின் மருத்துவ பரிசோதனைச் சபையின் அறிக்கை | | |

தீர்வைச் சலுகை வாகன அனுமதிச் சீட்டொன்றை இந்த சுற்றறிக்கை நியதிகளுக்கு உட்பட்டு, வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் ஒப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்

---

எனது இலக்கம் :-
திகதி:-

பணிப்பாளர் அதிபதி,
வர்த்தக, முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,
பொதுத் திறைசேரி

16/2014 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் கீழ் மேற்குறிப்பிட்ட உத்தயோகத்தருக்கு தீர்வைச் சலுகை வாகன இறக்குமதிச் அனுமதிச்சீட்டொன்று வழங்குவது பொருத்தமானதென சிபாரிசு செய்கின்றேன்.

..........................................................
அமைச்சுச் செயலாளரின் ஒப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்

திகதி: -...........................................